காஞ்சிபுரம் சடையப்ப வள்ளலார் மாணவர் இல்ல வெளியீடு உ

# ஆனந்த லகரி

29379

இயற்றியவர்

இராமநாதபுரம்

வீரைக்கவிராச பண்டிதர்

திண்டுக்கல் நகராட்சி மன்ற ஆணையாளர்

உயர்திரு. கீ. இராமலிங்க முதலியார் M. A. அவர்கள்

முன்னுரை கொண்டது.

சருவசித்து, தைமீ

1948

பதிப்புரிமை] [0-3-0

# பதிப்புரை

உலகம், இறைவழிப்பட்டது. இறைவன், சக்தியோடிருந்து, படைத்தல் ஆதிய ஐந்தொழில்களையும் அருள் கொண்டாற்றுவன். "தோலுந்துகிலுங் குழையுஞ் சுருள் தோடும்—பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்—சூலமும் தொக்கவளையுமுடைத் தொன்மைக்—கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ" என்னும் மணிவாசகமும் அவ்விறைவனது அம்மையப்ப வடிவத்தையே அணிபெற எடுத்துக்காட்டுவதாகும். எனவே, சிவம் சக்தியோடும், சக்தி சிவனோடும் பிரியா நிலையில் உயிர்கட்குப் பேரருள் செய்யாநிற்பதைச் சிவஞானபோதம் கூறாநிற்கும்.

இனி, இருவினையொப்பும், மலபரிபாகமும் கைவந்தவர்கள் முதலிற் பெறுவது சத்திநிபாதமே. அதாவது, அம்பிகையின் கடைக்கண்நோக்கு. அதுவே, ஆண்டவனைக்காணும் பேறளிப்பதாகும். ஆகலின், அவ்வருட்சக்தி நோக்கி, உருகி உருகி, உள்ளத்தடத்து ஊற்றெடுத்துப் பாடிய அடியார்களுடைய பாக்கள் பல. அவற்றுள் ஆநந்தலகரியும் ஒன்றாகும்.

இந்நூல், இறைவியினது இறவா எழினலங்களை அழகுற எடுத்திசைப்பது. இதனை உளங்கொண்டு, முறைப்படி ஓதி வளம்பல பெற்றார் பலர். ஆகவே, மற்றவரும் பெற்றுப் படித்துப் பயனுற வேண்டியும், இஃது இப்போது கிடைத்தற்கரிதாயிருப்பது கருதியும், இந்நூல் முத்தமிழ் அச்சக மூலம் சடையப்ப வள்ளலார் மாணவ இல்லத்தாரால் வெளிவருகிறது.

இச்சிறிய அருள் நூலுக்கு அரியதொரு முன்னுரை எழுதியுதவிய எமது உழுவலன்புடைப் பெரியரும், தண்டமிழ் வாணரும், இன்குண நல்லரும், சிவநேயச் செல்வருமான திண்டுக்கல்—நகராண்மைக் கழக ஆணையாளர் உயர் திரு. கீ. இராமலிங்க முதலியார் M. A. அவர்கட்கு நாங்கள் என்றுங் குன்றா நன்றி கூறுங் கடப்பாடுடையோம்.

இதனை அன்பர் யாவரும் அடைந்து ஆன்ற இன்பம் எய்துவார்களாக!

இங்ஙனம்,

காஞ்சீபுரம்,
24-12-47.

சடையப்ப வள்ளலார் மாணவ இல்லத்தார்.

# முன்னுரை

ஆதிசங்கராசாரிய சுவாமிகள் இயற்றிய சௌந்தரிய லகரி என்ற, நூறு பாடல்கொண்ட வடமொழி நூலின் கருத்தை இராமநாதபுரம் விரை கவிராசபண்டிதர் என்னும் தேவி உபாசகப் பெருந்தகையார் மிக அருமையான தமிழில் அதே 'சௌந்தரிய லகரி' என்ற தலைப்பில் நூறு பாடல்களாகப் பாடியுள்ளார். அந்த சௌந்தரிய லகரியின் முதல் நாற்பது பாடல்களே 'ஆநந்தலகரி' என்ற தனிப்பெயரால் வழங்கப்பெறுகின்றது. ஆதிசங்கரரும் அப்படியே அம்முதல் பகுதிக்கு அப்பெயரை இட்டிருக்கிறார்.

பின்னுள்ள அறுபது பாடல்கள் உண்மையில் தேவியினுடைய பாதாதிகேசமான திருவுருவ வருணனையைக் கூறுகின்றனவாதலால், அப்பகுதிக்கே சௌந்தரிய லகரி என்ற தலைப்பை நிறுத்திக்கொள்ளல் பொருந்துவதாகும்.

முன்பகுதி தேவியின் அருளால் பெறக்கூடிய பல நன்மைகளைக் கூறுகின்றது. ஒவ்வொருபாடலும் ஒவ்வொரு பயன் கருதி உருவிடலாமெனவும் குறிக்கப்பெற்றிருக்கிறது. அப்படியே உருவிட்டுப் பயன் பெற்றவர் வரலாறுகளும் கர்ணபரம்பரையாய்க் கேட்கப்படுகின்றன. ஒரு பெரியாரைத் தெரிந்துகொள்ளாத முன்னம் அவரை நெருங்குவது அரிது. அவரைத் தெரிந்துகொள்வது என்பது அவர் நமக்கும் மற்றூர்க்கும் செய்யத்தக்க அருட்செயல்களை அறிந்துகொள்வதாகும். எல்லாம் வல்ல பொருள் அன்னை வடிவமாகவே இருக்கின்றது என்ற கருத்தை ஒவ்வொரு பாடலிலும் வற்புறுத்துவதோடு அவ்வன்னை வேறு கடவுளெனப் போற்றும் வடிவங்கள் யாவற்றிற்கும் மேலானது என்றும், அத்தாயே எல்லாக்

குறைகளையும் போக்கி எல்லா நலங்களையும் இனிது பெருக நல்கும் என்றும், முதல் நாற்பது பாடல்களிலும் விதந்து ஓதுகின்றார் விரை கவியரசர். குண்டலினி, ஆறு ஆதாரங்கள், ஆயிர இதழ்க்கமலம், யோகமுறையால அன்னையின் ஆற்றலையுணர்ந்து நுகரல் இவைகளும் இப் பாடல்களில் குறித்துச் சொல்லப் பெறுகின்றன. ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொருவகைச் சக்கரம் அமைத்து வழிபடும் வழக்கம் உண்டு.

பேரருளான பெரும்பொருள், ஒரு பொருள், எல்லாம் வல்ல பொருள், எல்லாங்கடந்து எங்குட் உள்ள பொருள், என்றும் அழியாப்பொருள், அன்னையின் அன்புடையதாய், அன்னை வடிவுடையதாய், நமது குறைகளையெல்லாம் போக்கி, நமது தேவைகளையெல்லாம் தந்து, இன்பம் நிரப்பி, நாமும், நமது உறவும் ஊரும், நாடும், உலகும், செம்மையுற்று இலங்குமாறு செய்யவேண்டும் என்று குழந்தையுள்ளத்தோடு படித்துப் பாராயணம் செய்து, பாடிப் பயன்பெறுதற்காகவே நான் குடும்பத்தில் வைத்துப் படித்துக்கொண்டிருந்தபடிக் கொப்ப இஃது, இக் கையடக்கமான பதிப்பாக எனது அன்பின் செல்வர் திரு. காளப்ப முதலியார் அவர்களால் அச்சு செய்யப்பெற்றது.

திண்டுக்கல்,
24—12—47.

கீ. இராமலிங்க முதலியார், M. A.,
நகராட்சி ஆணையாளர்,

# ஆனந்தலஹரி

### எல்லா நன்மை

'சிவம்' எனும் பொருளும், ஆதி சத்தியொடு
சேரின், எத்தொழிலும் வல்லதாம்;
இவள் பிரிந்திடின், இயங்குதற்கும் அரிது,
அரிது' என, மறை இரைக்குமால்,
நவ பெரும் புவனம், எவ்வகைத் தொழில்,
நடத்தி, யாவரும் வழுத்து தாள்,
அவனியின்கண், ஒருதவம் இலார், பணியல்
ஆவதோ? பரவல் ஆவதோ? 1

### சர்வ வசியம்

பாத தாமரையின், நுண்துகள், பரம
அணுவினில், பல இயற்றினல்,
வேத நான்முகன் விதிக்க, வேறுபடு
விரிதலைப் புவனம் அடைய; மால்,
மூது அரா வடிவு எடுத்து, அனந்த முது
கண பண அடவி பரிப்ப; மேல்
நாதனர், பொடிபடுத்து, நீறு அணியின்,
நாம் உரைத்து என்? அவள்பான்மையே! 2

### சர்வ வித்யா பிரதானம்

அறிவு இலர்க்கு, இதய திமிரம் ஈரும், அளவு
அற்ற ஆதவர், அளப்பு இலா

எறி கதிர் ப்ரபை, குழைத்து இழைத்தனைய
தீவி, யாமளை; நினைப்பு இலார்
செறி மதிக்கு, இணரின் ஒழுகு தேன் அருவி;
தெறு கலிக்கு அருள் மணிக் குழாம்;
பிறவி மைக்கடல் விழாது எடுப்பது ஒரு
பெருவராக வெண் மருப்புஅரோ. 3

## சர்வ பாப கஷ்ட வியாதி நிவாரணம்

'தேவ்!' எனப் புகழ, அதில் நிமிர்ந்து, நிகர்
செப்புவார், அபய வரதமாம்
பாவகத்து, அபினயத்தொடு உற்ற, கை
பரப்பி, என் பயம் ஒறுக்குமே?
யாவருக்கும் அஃது அரிது, நின்பதம்
இரப்ப, யாவையும் அளிக்குமால்,
மூவருக்கும் ஒருதாவரப் பொருள் என்,
மூலமே தழையும் ஞாலமே!

## புத்திர சந்தானம்

தொடு கரச் சிலை தொடப் பொரு மலர்,
சுருப்பு நாண், இந்வது ஐந்து கோல்,
அடு படைத் தலைவனார் வசந்தம், அலை
தென்றல் தேர், உருவம் அருவம் ஆம்,
முடுகு கொற்ற மகன், ஒருவன், இப்புவனம்
முற்றும் வெற்றிகொள, முடிவு இலா
நெடு மலர்க் கண் அருள், சிறிது அளித்தனை
நீலியே! கர கபாலியே! [கொல்? 5

## சர்வத்திர பூஜ்ஜியவர்ணக

மாயன் வணங்கி, உன் மால் வடிவம் கொள,
வாடும் அரன் துயர், போதாதோ ?
தூய மதன் தொழ, ஆண் வடிவம் புணர்
தோகை கண், வண்டு அயில் தேனே போல்
மேய, வழங்கும் உருபம் அது, என் சொல?
மேல் இது கண்டவர் வாழ்வாரோ ?
நீ அதி ரஞ்சகி! மோகன வஞ்சகி!
நீ செய்வது ஒன்று அல் மாதாவே! 6

## சத்ரு ஜயம்

மேகலை பொங்க, மதாசல கும்பம் என,
முலை கண்டு இடை சோரா, நீர்
மாகம் வளம்கெழு நாள்நிறை அம்புலி,
வாள்முகம், அம்பு வில் ஏடார் போது
ஏக நெடுங்கழை, பாசமொடு அங்குசம்,
ஏர்பெற வந்து அருள், காபாலி!
"நீ கமலம் திகழ் தாள் வருடு!" என்று, அரன்
நீர்மையின் விஞ்சிய கோமாதே! 7

## ஜனன மரண நிவர்த்தி

ஆர் அமுது இன்கடல், வேலி செழும்தரு,
வாய்மணி பம்பிய தீவூடே,
பார கடம்பு அடர் கானில், அருங்கொடை
பாய்மணி மண்டப வீடூடே,

கோர சிவன் பரமேசன் உன்மஞ்சம், ஓர்
கூர் பரிஅங்கம், எனு மேலே
சீர் அடரும் பரஞானம் உறும்களி
தேவர் அருந்துவர் பூமாதே! 8

## பஞ்சபூத வசியம்

மூலமணி, பூரகத்தோடு, இலிங்க, மார்பு,
முது களம், வில்புருவநடு, மொழிவது ஆறு,
ஞாலமும், மென்புனலும், அனல்பிழம்பும், காலும்,
நாதமுறு பெருவெளியும், மனமுமாக [பால்
மேல் அணுகிக், குளபதத்தைப் பின்னிட்டு, அப்
மென்கமலத்து ஆயிரம்தோட்டு அருணபீடத்து,
ஆலவிடம் பருகிய தன் மகிழ்நரோடும்,
ஆனந்தம் உறும்பொருளை, அறியலாமே. (9)

## சரீர சுத்தி

தாள் இணைக் கமலம் ஊறித்,
தரும் அமிழ்து, உடலம் மூழ்க,
மீள, அப்பதங்கள் யாவும்
விட்டு, முற்பழைய மூலம்,
வாள் அரவு என்ன, ஆகம்
வளைத்து, உயர் பணத்திடுை,
நாளும் மைக் கயல் கண் துஞ்சும்,
ஞான ஆனந்த மின்னே! (10)

## கர்ப்ப தாரணம்

சிவகோணம் மூற் பகர்வது ஒருநாலும், சத்திநெறி
செறிகோணம் அத்தொடு ஒரு மருவு கோண்,
நவகோணம் உட்படுவது எழுமூ இரட்டிஒரு
நவில் கோணம் உற்றதுவும், வலயமாய்
இவரா நிரைத்த தளம் இருநாலும், எட்டுஇணையும்,
எழிலாய வட்டமொடு சதுரமாய்,
உவமானம்அற்ற தனி தனி மூவகைக்கணும் என்
உமைபாதம் உற்ற சிறுவரைகளே. (11)

## வாக்கு மகத்வம் மகாகவித்வம்

ஆதி சுந்தரி வடிவினை,
அயன் முதல் புலவோர்,
ஏது கண்டு அளவு இடுவது?
தமை இகழ் இமையோர்
மாதர், இங்கு இவள் மகிழ்நரோடு
உறைகுவம் எனின், ஓர்
பேதை கொங்கைகள்
பெறுகுவம் என மறுகுவரால்! (12)

## மகளிர் மயலை வெல்ல

அறக்கிழவன், மனிதன், விரகு இல்லாக்கொச்சை,
அழகு இருந்த ஊரில் இருந்து அறியானேனும்,
உறக் கருணை கொழிக்கும், உனது அமுதவாரி,
ஊடு அணுகின், அவனை, அரமகளிர் எல்லாம்,

நறைக் குழலும் சரிந்திட, உத்தரீயம் சோர,
நாண் அழிய, வளை சிதற, உடுத்த ஆடை
புறத்து விழ, மயலொடும் பின் தொடர்வர் என்றால்
பொற்கொடி! நின்புதுமை எவர் புகழ
[வல்லார்? (13)

## க்ஷாமம், கொள்ளை நோய், நிவர்த்தி.

பணை, பார், புனல், கனலி, வளி, வான், மனத்தில்,
பதில் நால் ஒழித்தது, முன் அடைவிலே [அறு
இணை நால் ஒழித்தது, இரு கதிர் ஏற உற்றது, மூ
இணை போயது, எட்டினொடு கதிர்கள் நால்
அணையா நிரைத்தது, உறு கதிர் நால் அடுத்தது,
அளவாய், இலக்கம் அறுவகையினால், [அதன்
உணரா உரைத்த, கதிர்களின் மேல் இருக்கும்
உமைபாத செக்கர் விரி கமலமே. [எனது (14)

## கவித்வம்—ஞானம் உண்டாம்.

உன்து சரற்கால மதி அனைய மெய்யும்,
உடல் குழைத்த பிறைச் சடையும், கரங்கள்
அனவரதம் உறும், அபய வரத, ஞான [நான்கும்,
அருட் பளிங்கு வடமொடு புத்தகமும் ஆக
நினைகிலர், முன் வழுத்திலர், பின் வணங்கார், எங்
நிறைத்த பசும் தேனும், அடுபாலும், தூய [ஙன்?
க்னியும், என, மதுரம் விளைந்து ஒழுகு பாடல்
கவிதை பொழிவது, கயிலைக் கடவுள் வாழ்வே! (15)

## வேதாகம ஞானம் உண்டாம்.

வாரின்ப முலைமலை மடந்தை, கவி நாவலர்
மனக் கமல வனம் அலர, நீள்
தேர் இன்ப இளவெயில் தழைக்கும் ப்ரபைச்
செவ்வி நிறம் உணரும் உரவோர், [செய்ய
தார் இன்ப நறவு ஒழுகு சுருள் ஓதி, இருள் விரவு
தவளநிற வாணி, கலைதேர்
பேர் இன்ப மதுரவலை எறி, அமுத கவிதை கொடு
பேர் உலகை மகிழ் விப்பரே (16)

## சாஸ்திர ஞானம்

இந்து சிலையைப் பிளந்து, உள்நிறம் வகுத்து
எழில் வசனி யாதி மடவார், [அனைய
அந்த இணை நால்வர் புடைசூழ, மலைமங்கை தனது
அருண வடிவு உணர அறிவோர்,
கொந்து அவிழ விரி, தவள மலர்மங்கை முககமல,
கோல பரிமள கவிதையால்,
செந்தமிழின், வடகலையின், முதுமொழிக் காவியத்
தெளி பாடல் செய்யும் அவரே. 17

## பெண் ஆசை நீங்க

உனது நிறம் எனும் இளைய கதிர் இரவி வெயில்
உலகு அடைய, என நினைகுவோர், [முழுகும்
வினை கெழுமு கொலை மறலி அனைய விழி, உரு,
விரவும் அரமகளிர் விழைவோர், [வசிமுன்

அனவரதம் என்து அமுது பொழி கவியும், உனது
எனது உடலும், உயிரும், உயிர்சூழ் [அருளும்,
மனமும், அதில் உணர்வும்,வருகளியும், என, நினைவு
மலை அரையன் உதவும் மயிலே! [உருக 18

## பெண் தோற்றம் மயக்காதிருக்க

ஆதி விந்துவை முகம் என, இணை முலை
கீழ் இரண்டு அதன் வடிவு என, அருகுதாழ்
கோதறும் சுடர் எழ அழகு ஒழுகுத் திரி
கோணம் ஒன்று என, உனது எழில் இரதிதோய்
காதலன் கலை தமது இடம் நினைபவர்,
காணும் மங்கையர் கலைகொளல் அரியதோ?
ஓதில், இங்கு இரு சுடர் முலை அனைய உ
லோக மங்கையை, மயல் செய்வர் கமலையே! 19

## சர்வ விஷமும், சுரமும் நிவர்த்தி

ஆடல் அம்பிகை, இமகர சிலை வடிவு
ஆளும் நெஞ்சினுள் வழிவுறு கிரணம் மேல்
ஓடி, எங்கணும் உடல் பெருகு அமிழ்து என,
ஊடு எழும் ப்ரபை, தமது இடம் உணர்குவோர்,
நாடவும், கொடும் விடம், ஒரு கலுழனை
நாடும் வெம் கொலை அரவு என முறியும், மேல்
மூடு அருஞ்சுரம் விழிபொழி அமுதினின்
மூழ்க, என்பொடு, அழல் உடல் குளிருமே. 20

## சர்வ வசீகரம் •

ஆனமின்கொடி போலும், மென்முண்டகம்
ஆறின், மண்டல மூவகையின் கண், ஓர்
பானு, அம்புலி, தீயின், நிறம் கிளர்
பான்மை கொண்டு, இதழ் ஆயிர கஞ்சம் நீள்
கானில், உன் களிஞானம் உறும் கலை,
காழ் மலங்களின் மூவகை பொன்றியே
போன சிந்தையின், மாயை ஒழிந்தவர்,
போதம் இன்புறும், ஆதியொடு அந்தமே 21

## சர்வ சித்தி

பேர் உறும் கயிலாசன் மகன் பெறு
பேரன் அன்புறு பேரன், எனும் சொலால்,
"வாரம் அன்பொடு பார்வை வழங்கு!" என,
வாய் திறந்திட ஓடி வழங்கினய்,
வேரி முண்டகன், மால், மகுடங்களின்
வீசரும் ப்ரபை தீபம் உவந்த தாள்
சேரு நன் பெரு வாழ்வும் வழங்குவை
தேடரும் சிவ மாய மதங்கியே! 22

## சர்வபூத பிரேத பிசாசம், சர்வ வியாதி கடன் உட்சாடனம்

ஆதி சங்கரர் பாதி உடம்பு இனிது
ஆளும் அம்பிகை! பாதியும் விஞ்சுமோ?
நீதி அன்று என, நாயகர் பங்கையும்
நீ கவர்ந்தனையால் அவர் எங்குளார்?

சோதி செங்கதிர் மேனி நிறைந்தது,
தூய கண்களும் மூவகை, கொங்கையோ
ஈது இரண்டு, உடல் கூறும் இளம்பிறை
ஏர் பொழிந்தது நீள்முடி எங்குமே.

## பூத பிரேத பிசாச உட்சாடனம் 23

ஆதி முண்டகன், மால், சிவன், அண்டர் ம
கேசன், அந்த சதாசிவன், ஐந்து பேர்
மேதகும் தொழில் போல, வணைந்து அருள்
வீறும், அங்கு அதன் ஊறலும் உண்டென;
யாதும் இன்றியும், மேனியொடு எங்கணும்
மாயை தந்ததும், ஞானம் இரங்கும் ஓர்
நீதியும், திருவே! புருவம் கொடு
நீ சொல் இங்கித ஏவல் புரிந்ததே. 24

## உன்னத பதவி கவுரவம் உண்டாம்

மூவருக்கும் முதற் பிறப்பு நின்
முக்குணக்கடல் என்று, முன்
சேவடிக்கண் இருப்பர், சென்னி கு
வித்தசெங்கை பிரிக்கிலார்;
பூ எடுத்து அவர் சென்னிவைத்திடு
போதம் உற்றவர், அம்மை! நின்
கா அலர்ப் பொதி தாளில் வைக்கவும்
மூவர் சென்னி களிக்குமே. 25

## சத்துரு ஜயம்

வேத ரஞ்சகன், மால், புரந்தரன்,
வேக சண்ட, குபேரனேடு
ஆதி எண்திசை பாலர் பொன்றவும்
ஆதி அந்தம் இலாத தோர்
நாதர், பொன்றிலர்; ஏது? உன் மங்கல
நாண் உறும் திறம்! ஆதலால்,
நீ தழைந்தது யோகம், அம்பிகை!
நீலி என்பது பாவமே! 26

## ஆத்ம ஞானம்

மொழிவது உன்செபம், முத்திரை பாணியின்
முயல்வது, எங்கும் நடப்பன கோயில் சூழ்
தொழில், அருந்துவ முற்றும் உன் ஆகுதி,
துயில் வணங்கல், களிப்பன யாவும் நீ,
ஒழிவுஅறும்களி என் செயல் யாவையும்
உனது நன்செய் பரிச் செயலாகவே
அழிவு அறும் பதம் வைத்துஅருள், பேர் ஒளி!
அளிவிளைந்து, களிப்பு எழு நாதமே! 27

## அகால மிருத்தியு நிவாரணம்

பிரமன், இந்திரன், முற்பிற
தேவர்கள், ஊண் எல்லாம்,
நரை பெரும் திரை அற்ற,
நல் ஆர் அமுதே கொலாம்,

ஒருவர் தங்கிலர்! இல்சிவன்
ஊண் விடம், வாழ்வன்! மாது!
இரு பெரும் கழை இட்ட,
பொன் ஓலையின் வாசியே! 28

## சர்வசித்தி, மூர்க்கரை வசப்படுத்தல்

முதுமறைசொல் இளவனிதை, அயனொடு, அரி, குலி
உனை முறை பணியும் நெறியின் இடையே [சன்
பதறி, உனது அருகு வரும் அரனை, எதிர்கொள,
பரிசனம், உன் அடிவளமையால், [உனது
'இதுபிரமன் மகுடம், அரிமகுடம் இது, குலிசன்
இது, கடினம், இடறும் இருதாள் [முடி
கதிஅமர அமர, வழி விலகி வர வர, எமது
கடவுள்!' எனும் மொழி, தழைகவே! 29

## இராஜவசீகர முள்பட சர்வ வசீகரம்

பசுபதி தன் நீதி கொண்டு, அறுபத்துநாலு பல
கலை ஞானமும், கருணையால்
வசிவு அற நெடும்புவனம் மாயையின் மயக்கி, அதன்
வழிவரு பெரும்பயன் எலாம்,
இசை பெற விளைத்ததும், பின்னும் உனது ஏவ
இணையில் உனது ஆகமம் எலாம், [லால்
விசை பெற விளைத்து, எவையும் இதுதர அளித்தது
விமலை! உனது உரிமை அலவோ! [வும், 30

## இரசவாத சித்தி

அரியதாகும் சிவம், சக்தி, மதன், அவனி, பின்பு
ஆதித்தன், மதி, மதனவேள்,
பெருகுவான் இந்திரன், பின்பு பரை, மதனன்,
பேசின், முக்கண்டம் அடைவே, [மால்,
உரியதாம் அந்தத்தின் மாயை மும்முறை அமைத்து
உறும் எழுத்து அடைய, உணர்வால்
தெரியின், நாமத்தினெடு உனது உருப்பாம் என்று
செப்பும், நான் மறைகள், உமையே! 31

## திரவிய லாபம்

மோக போக விழைவினர், உன்
மூலவித்தை தன்னின் முன்
ஞக, மாரன், யோனி, பொன், அ
ணங்கு, அமைத்து, நெய்யினல்
யோகம் ஆர் சிவத்தழற்குள்,
ஓமம் உற்று, விமலையே!
தியாக மா மணிக்கொடு, அக்க
வலயம் உள் செவிப்பரே. 32

## சந்தேக நிவர்த்தி

இருசுடர் மூலத்துணைச் சிவன்வடிவு நீ, அதனை
யானும் நவமாக நினைவேன்;
உருவு நிறை தன்னில், அளவு ஒத்த ரமானந்
உடைய பரனெடு, பரையுமாய், [தம்

மருவும் இனிதாம், உங்கள் கூட்டம், அதுசேடமும்
 மறுத்து அதனை, உடையதுவுமாய், [கொல்?
அருகில், இருவர்க்கும் ஒரு பொதுவாகி, நிற்கும்
 அழிவு அற்ற ஞான முதலே! 33

## க்ஷயரோக நிவர்த்தி

மனமும் நீ, வெளியும் நீ, வளியும் நீ, கனலும் நீ,
 மறிபுனலும் நீ, புவியும் நீ,
நினையில், நீ பரம்அற வளர்ந்து, ஒளிபரந்துவிடில்,
 நீ அன்றி ஒன்றும் உளதோ?
உனது, மா ஞான ஆனந்த உருவைப், புவன
 உரு என வகுத்து அருளவோ?
அனையுமாய், மகவும் ஆமாறுபோல் நீ சத்தி
 அருணவடிவு ஆயது உமையே! 34

## சர்வ வியாதி நிவாரணம்

அருளும் உனது ஆக்கினைத் திகிரிக்குள் உட்பட்டு,
 அருக்கன், மதி, அனைய வடிவாய்ப்,
பருவமுதிர் பரசின் மயத்தொடு உறு பான்மையாம்
 பரமசிவனைப், பணிகுவாம்,
ஒருபொழுதில் இப் பரமசிவனை, எழுகதிர் மதிய
 ஒளிகடந்து, ஒளிரும், ஒருபால்
பெருகு பரமானந்த விழைவுஒளி, நினைப்பது
 பெறுமுத்தி, சத்தி ஒளியே! [கொல்? 35

## பிரம்ம ராட்சத நிவாரணம்

இறைவி! நின் விசுத்தித் தலத்துஇடை, பளிங்குநிற
எழிலொடு, உலகு அருள் தந்தையாய்,
உறையும் ஒருசிவனையும்;அவன்போலும் ஆரம்பம்
உடைய உனையும் பணிகுவாம்,
நிறைமதி ஒளிக்குஒத்த, நெறிஏகும், உமதுஒளி
நிலவுண்டு, பசிகளைவதோர் [யின்
முறைபெறு சகோரம்என, உலகு பாதக இருள்
முடித்துக், களித்து உறையுமே. 36

## பால கிரக தோஷ நிவாரணம்

முன்னைத் தபோதனர்தம் இதய மானத வாவி
முத்து ஞான முளரி நறவு ஆர்ந்து,
அன்னத்தின் வடமொழிப் பெயர்பெற்று, மொழி
அறு மூன்று விஞ்சை விரிவால், [பயிலும்
பன்னப் பொதிந்த, தீவினை நீரில், நற்குணப்
பால்பிரித்து உண்டு, களியா,
மன்னப் படுஞ்சிறைப் புள் இணையை, நாடொறும்
வழுத்துதும், மலர்க்கமலையே! 37

## பௌஷ்டிய ஞானம் பெற

விரித்த இருள் விழுங்கு சக்தி மின்னொடும், பன்
மணி இந்த்ர வில்லினொடும்,
தரித்தமறை பரவு சிவ தபனகதிர்
எறிப்ப, அதில் தழன்று, தீயில்

பிரித்து உலகம் குளிர, ஒளிதழைத்து ஒளிரப்,
 பொழி அமுத தாரை மாரி
பரித்த, மணி பூரகத்துள், பச்சை முகில்
 பணிவன், அருள் பழுத்த கொம்பே! 38

## துர்ச்சொர்ப்பன நிவர்த்தி

நிலைபெறு சுவாதிட்டான
 நின் சிவ அனலும், நீயும்,
இலகிய தன்மை நெஞ்சத்து
 இறைஞ்சுவம், உரைக்க மாட்டேம்;
உலகம் அப்பார்வை செந்தீக்கு
 உருகின், நின் கருணை பொங்கி,
அலைஎறி அமுதப் பார்வை
 அளித்து, இனிது அருளும் அம்மே! 39

## குன்ம நிவர்த்தி

நீ நந்து மூல ஆதாரத்தில், ஆனந்த
 நிர்த்தம் இடும் இறைவி! நின்னோடு
ஆனந்தத் தாண்டம் விளைத்து, நவ வடிவு பெறும்
 ஆதிசிவனைப் பரவுவாப்;
வானம் தொடுத்து, உலகம் அடையப் படைத்து
 வகையின் புணர்ச்சி அலவோ? [இடும், இவ்
ஞானங்கொள், அனை, தந்தை, என, உலகு தெளி
 [வுற 40
 நடத்துவது, ஞானஒளியே!

முத்தமிழ் அச்சகம், காஞ்சி. Q. H. C. T. 18. 1058-4. 500